**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு.**

முன்னிலை. திரு.S.R.பாபு B.A., B.L.

நீதித்துறை நடுவர் எண்.3, ஈரோடு.

2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 10-ம் நாள் புதன்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு 722/2025**

**CNR No-TNED 04-005525-2025**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,<br>ஈரோடு தெற்கு காவல் நிலையம்.<br>குற்ற எண்.175/2025 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | : | சதாசிவம் வயது 42/2025,<br>த/பெ.செல்வராஜ்,<br>192 கொத்துக்காரர் வீதி, வீரப்பன்சத்திரம், ஈரோடு. |
| வனையப்பட்ட குற்றங்கள் | : | U/s. 112 of BNS & U/s. 5, 7(3) TNLR Act |
| குற்றம் நிகழ்ந்த நாள் | : | 07.06.2025 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 07.06.2025 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | : | 07.06.2025 – 11.06.2025 (5 நாட்கள்) |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 11.06.2025 |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 01.09.2025 |
| BNSS பிரிவு 263-இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 21.11.2025 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | : | 15.05.2026 |
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | : | 03.06.2026 |
| BNSS பிரிவு 348-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | : | இல்லை |
| BNSS .பிரிவு.351(1)(ஆ)-இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 04.06.2026 |
| தலைமறைவு எதிரிகள் குறித்த விவரம் | : | இல்லை |



S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.06.10 13:31:47 +0530

| | | |
|---|---|---|
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | : | இல்லை |
| வழக்கு தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்ட நாள் | : | 10.06.2026 |
| தீர்ப்பு பகரப்பட்ட நாள் | : | 10.06.2026 |
| தீர்மானம் | : | எதிரி BNS பிரிவு 112, சட்டப்பிரிவு 5, 7(3) TNLR Act – ன் கீழ் குற்றவாளி இல்லை. |
| முடிவு | : | இறுதியாக, எதிரி மீது சுமத்தப்பட்ட BNS பிரிவு 112, சட்டப்பிரிவு 5, 7(3) TNLR Act–ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை BNS பிரிவு 112, சட்டப்பிரிவு 5, 7(3) TNLR Act–ன் படி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை BNSS பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>எதிரி பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.<br>இவ்வழக்கில் PR No. 114/2025–ல் தாக்கல்செய்யப்பட்ட அ.த.சா.ஆ.3 ஆவணமானது அரசு தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளதால், வழக்கு கோப்புகளுடன் வைக்க உத்தரவிடப்படுகிறது. மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது.<br>மேலும், இவ்வழக்கில் PR No. 114/2025–ல் தாக்கல்செய்யப்பட்ட அ.த.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பணம் ரூ.230/–ஐ எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக நிரூபிக்கப்படாத நிலையிலும், மேற்படி தொகையானது தன்னுடையது என்று எதிரியும் உரிமை கோராத நிலையிலும் மேற்படி பணம் ரூ.230/–ஐ மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின் அரசுக்கு ஆதாயமாக்க உத்தரவிடப்படுகிறது. மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது. |



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.10 13:31:51 +0530

இந்த வழக்கு 01.09.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், எதிரிகளுக்காக வழக்கறிஞர் திரு.M.முருகானந்தம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

**தீ ர் ப் பு ரை**

**ஈரோடு தெற்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையின் விவரம்:**

1. கடந்த 07.06.2025-ம் தேதி காலை 07.00 மணிக்கு ஈரோடு தெற்கு காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட டீச்சர்ஸ் காலனி அரோமா பேக்கரி அருகில் சதாசிவம் என்பவர் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட அங்கீராம் இல்லாத தமிழக அரசால் தடை செய்யப்பட்ட வெளிமாநில லாட்டரி சீட்டுகளின் எண்களை வெள்ளைத்தாள்களில் எழுதி விற்பனை செய்த குற்றத்திற்காக எதிரியின் மீது ஈரோடு தெற்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் BNS பிரிவு 112, சட்டப்பிரிவு 5, 7(3) TNLR Act – ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி குற்ற அறிக்கையை நன்கு பரிசீலித்து எதிரி மீது BNS பிரிவு 112, சட்டப்பிரிவு 5, 7(3) TNLR Act-ன் படி வழக்கினை கோப்புக்கு எடுத்துக் கொண்டு எதிரிக்கு அழைப்பானை அனுப்பப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் BNSS பிரிவு 230-ன் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது BNS பிரிவு 112, சட்டப்பிரிவு 5, 7(3) TNLR Act – ன் படி குற்றச்சாட்டுக்கான முகாந்திரம் இருப்பது பற்றி BNSS பிரிவு 263-ன் கீழ் எதிரியிடம் BNS பிரிவு 112, சட்டப்பிரிவு 5, 7(3) TNLR Act-ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து வாசித்து விளக்கிக் கூறி வினவிய போது எதிரி


S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.10 13:31:55 +0530

குற்றத்தினை மறுத்தார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அரசு தரப்பு சான்று பொருள் அ.த.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சிகள் 2, 3, 4 ஆகியோர்களை அரசு தரப்பில் விசாரிக்காமல் நீக்கரவு செய்யப்பட்டுள்ளது.

6. <u>**அரசு தரப்பு வழக்கு மற்றும் சாட்சியங்களின் வாயிலாக புலப்படும் வாதத்தின் சுருக்கம்**</u>

6.1) அ.சா.2 திரு.சேகர் தனது சாட்சியத்தில், கடந்த 07.06.2025 ம் தேதி காலை 07.00 மணிக்கு ரோந்து பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி ஈரோடு, டீச்சர்ஸ் காலனி, அரோமா பேக்கரி அருகில் கண்காணித்துக்கொண்டிருந்தபோது, சந்தேகத்திற்கு இடமாக நின்றுகொண்டிருந்த எதிரியை விசாரித்த போது தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட அங்கீகாரம் இல்லாத வெளிமாநில லாட்டரி சீட்டுகளின் எண்களை வெள்ளைத்தாள்களில் எழுதி விற்பனை செய்வதாக கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாகவும், பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர் எடுத்து ஆஜர் செய்த KL என்று லாட்டரி சீட்டு எண்கள் எழுதப்பட்ட வெள்ளை துண்டு சீட்டுகள்-3 (அ.த.சா.ஆ.3) மற்றும் லாட்டரி சீட்டு விற்ற பணம் ரூ.230/- (அ.த.சா.பொ.1) ஆகியவற்றை உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், அதில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் (அ.த.சா.ஆ.2) தன்னுடையதுதான் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் (அ.த.சா.ஆ.1) தன்னுடையதுதான் என்றும், பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.2) அ.சா.3 திரு.தினேஷ்குமார், தனது சாட்சியத்தில் கடந்த 07.06.2025-ம் தேதி காவலர் முருகேசன் மற்றும் காவலர் சேகர் (அ.சா.3) ஆகியோர்களுடன் ரோந்து பணியில் இருந்த போது தங்களுக்கு கிடைக்க இரகசிய தகவலின் படி கடந்த



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.10 13:31:59 +0530

07.06.2025 ம் தேதி காலை 07.00 மணிக்கு ஈரோடு, டீச்சர்ஸ் காலனி, அரோமா பேக்கரி அருகில் கண்காணித்துக்கொண்டிருந்தபோது, சந்தேகத்திற்கு இடமாக நின்றுகொண்டிருந்த எதிரியை விசாரித்த போது எதிரி தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட அங்கீகாரம் இல்லாத வெளிமாநில லாட்டரி சீட்டுகளின் எண்களை வெள்ளைத்தாளில் எழுதி செய்வதாக கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டதாகவும், பின்பு அவர் எடுத்து ஆஜர் செய்த KL என்று லாட்டரி சீட்டு எண்கள் எழுதப்பட்ட வெள்ளை துண்டு சீட்டுகள்–3 மற்றும் லாட்டரி சீட்டு விற்ற பணம் ரூ.230/– ஆகியவற்றை மேற்படி காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் (அ.த.சா.ஆ.6) கைப்பற்றியதாகவும், பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை (அ.த.சா.ஆ.7) பதிவு செய்ததாகவும், வழக்கு சொத்தை படிவம் 91 (அ.த.சா.ஆ.8) மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தாகவும், பின்னர் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் (அ.த.சா.ஆ.4), மாதிரி வரைபடம் (அ.த.சா.ஆ.5) தயார் செய்ததகாவும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது BNS சட்டப்பிரிவு பிரிவு 112, சட்டப்பிரிவு 5, 7(3) TNLR Act – ன் கீழ் இறுதி அறிக்கை தயார் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிவடைந்தது.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவடைந்த பிறகு எதிரிக்கு பாதகமாக தோன்றக் கூடிய அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(b)–ன் கீழ் தொகுத்து வினவிய போது எதிரி அதனை மறுத்தார். எதிரி அவரது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

8. தற்பொழுது இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

9. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அரசு



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.10 13:32:03 +0530

தரப்பு சான்று பொருள் அ.த.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சிகள் 2, 3, 4 ஆகியோர்களை அரசு தரப்பில் விசாரிக்காமல் நீக்கரவு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்</u>:

10. இருதரப்பும் கேட்கப்பட்டது வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

11. இனி இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினையானது அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் தகுநிலை ஐயப்பாட்டிற்கப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

12. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் மூலமாகவும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், அ.த.சா.பொ.1 அரசு தரப்பு சான்று பொருள் மூலமாகவும் அரசுதரப்பு தன் வழக்கினை மெய்ப்பித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தண்டணை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

13. மாறாக, எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தமது வாதத்தில், இவ்வழக்கில் பொது ஜன சாட்சிகள் முன்னிலையில் எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றும், அசல் லாட்டரி சீட்டுகள் எதையும் பறிமுதல் செய்யவில்லை என்றும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள அ.த.சா.ஆ.3 ஆனது லாட்டரி சீட்டு இல்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக பொய்யாக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும், எதிரியை விடுதலை செய்யமாறு வாதிட்டார்.

14. இவ்வழக்கில், கண்ணுற்ற சாட்சியாக அ.சா.1–ம், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியாக அ.சா.2–ம், மற்றும் புலன் விசாரணை அதிகாரி அ.சா.3



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.10 13:32:07 +0530

ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

15. எதிரி மீதான BNS பிரிவு 112, சட்டப்பிரிவு 5, 7(3) TNLR Act – ன் கீழான குற்றம் குறித்து பரிசீலிக்கும்போது, கடந்த 07.06.2025–ம் தேதி காலை 07.00 மணிக்கு ஈரோடு தெற்கு காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட டீச்சர்ஸ் காலனி அரோமா பேக்கரி அருகில் சதாசிவம் என்பவர் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட அங்கீராம் இல்லாத தமிழக அரசால் தடை செய்யப்பட்ட வெளிமாநில லாட்டரி சீட்டுகளின் எண்களை வெள்ளைத்தாள்களில் எழுதி விற்பனை செய்தார் என்பதேயாகும்.

16. எதிரி மீதான BNS பிரிவு 112, சட்டப்பிரிவு 5, 7(3) TNLR Act–ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்கும் போது, இவ்வழக்கில் நேரடி சாட்சி மற்றும் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3–ன் சாட்சியத்தை பரிசீலிக்கும்போது, அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 07.06.2025–ம் தேதி காலை 07.00 மணிக்கு காவலர் முருகேசன் மற்றும் காவலர் சேகர் (அ.சா.2) ஆகியோர்களுடன் தங்களுக்கு கிடைக்க இரகசிய தகவலின் படி ஈரோடு டீச்சர்ஸ் காலனி அரோமா பேக்கரி அருகில் கண்காணித்துக்கொண்டிருந்தபோது, சந்தேகத்திற்கு இடமாக நின்றுகொண்டிருந்த சதாசிவம் (எதிரி) என்பவரை விசாரித்த போது சதாசிவம் (எதிரி) தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட அங்கீகாரம் இல்லாத வெளிமாநில லாட்டரி சீட்டுகளின் எண்களை வெள்ளை பேப்பரில் எழுதி விற்பனை செய்வதாக கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாகவும், பின்பு அவர் எடுத்து ஆஜர் செய்த KL என்று லாட்டரி சீட்டு எண்கள் எழுதப்பட்ட வெள்ளை துண்டு சீட்டுகள்–3 மற்றும் லாட்டரி சீட்டு விற்ற பணம் ரூ.230/– ஆகியவற்றை காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியதாகவும், கைப்பற்றிய வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் சம்பவ இடம் சென்று பிலால, ஹரிஷ் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததகாவும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புலன் விசாரணையை முடித்து



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.10 13:32:12 +0530

எதிரிகள் மீது சட்டப்பிரிவு BNS பிரிவு 112, சட்டப்பிரிவு 5, 7(3) TNLR Act – ன் கீழ் இறுதி அறிக்கை தயார் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.3–ன் சாட்சியத்தை ஒற்றியே அ.சா.2–ம் சாட்சியம் அளித்துள்ளார்.

17. எதிரி தரப்பு வழக்கறிஞர் தமது வாதத்தில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அ.த.சா.ஆ.3–ஆனது வெளிமாநில லாட்டரி சீட்டுகள் இல்லை என்றும், அவ்வாறு வெளிமாநில லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்வதாக பொதுமக்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றும் வாதிட்டார். மேற்படி சங்கதியை குறித்து பரிசீலினை செய்கையில், அ.த.சா.ஆ.3–ஐ பார்வையிடும் போது KL 145, 006, 412, 312, 519, KL 110, 118, 109, 675, 616, KL 901, 750, 860, 670, 155 என்ற எண்கள் மற்றும் எழுத்துக்கள் வெள்ளைத்தாளில் எழுதப்பட்டுள்ளது தெரியவருகிறது.

18. மேற்படி அ.த.சா.ஆ.3–ல் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் வெளிமாநில லாட்டரி சீட்டுகளில் உள்ள எண்கள் தானா என்பது குறித்து பரிசீலிக்கும்போது மேற்படி எண்களானது உண்மையில் வெளிமாநிலத்தில் அச்சிடப்பட்டுள்ள லாட்டரி சீட்டுகளின் எண்களா என்பது குறித்து அரசு தரப்பில் தெரிவிக்கப்படவில்லை. மேலும் மேற்படி வெள்ளைத்தாளில் KL 145, 006, 412, 312, 519, KL 110, 118, 109, 675, 616, KL 901, 750, 860, 670, 155 என்ற எண்கள் மற்றும் எழுத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி அ.த.சா.ஆ.3 ஆனது தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டு என்று கருதமுடியாது என்றும், எனவே அ.த.சா.ஆ.3 என்பது தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டு என்று அரசுதரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், எதிரியிடம் இருந்து அசல் லாட்டரி சீட்டுக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதும் தெரியவருகிறது. மேலும் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட அசல் லாட்டரி சீட்டுகள் எதுவும் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றும், எதிரி ஏமாற்றியதாக பொதுமக்கள் யாரும் புகார் அளிக்கவில்லை என்றும் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 தனது சாட்சியத்தில் ஒப்புக் கொண்டுள்ளது தெரியவருகிறது.

19. மேற்படி அ.த.சா.ஆ.3–ஐ லாட்டரி சீட்டு என்று கூறி எதிரி விற்பனை செய்ததை



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.10 13:32:16 +0530

கண்ணுற்றதாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.1−ன் சாட்சியத்தை பரிசீலிக்கும் போது, அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரியைத் தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளது தெரியவருகிறது. மேலும் அ.சா.1−ஐ அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போதும் அவர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பதும் தெரியவருகிறது. எனவே, உண்மையில் எதிரியானவர் அ.சா.1 னிடம் பரிசு விழும் என்று நம்ப வைத்து மேற்படி எண்கள் மற்றும் எழுத்துக்கள் எழுதிய வெள்ளை தாள்களை ஏமாற்றி விற்றாரா என்பது குறித்து சந்தேகம் எழுகிறது. மேற்படி சந்தேகத்தை தீர்க்கும் வகையில் சாட்சிகளோ சான்றாவணங்களோ அரசுதரப்பில் முன்னிலைபடுத்தப்படவில்லை. எனவே இந்த வழக்கில் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, சந்தேகத்தின் பலன் எதிரிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

20. இறுதியாக, எதிரி மீது சுமத்தப்பட்ட BNS பிரிவு 112, சட்டப்பிரிவு 5, 7(3) TNLR Act−ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை BNS பிரிவு 112, சட்டப்பிரிவு 5, 7(3) TNLR Act−ன் படி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை BNSS பிரிவு 271(1)−ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

21. எதிரி பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

22. இவ்வழக்கில் PR No. 114/2025−ல் தாக்கல்செய்யப்பட்ட அ.த.சா.ஆ.3 ஆவணமானது அரசு தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளதால், வழக்கு கோப்புகளுடன் வைக்க உத்தரவிடப்படுகிறது. மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது.



S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.06.10 13:32:21 +0530

மேலும், இவ்வழக்கில் PR No. 114/2025-ல் தாக்கல்செய்யப்பட்ட அ.த.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பணம் ரூ.230/-ஐ எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக நிரூபிக்கப்படாத நிலையிலும், மேற்படி தொகையானது தன்னுடையது என்று எதிரியும் உரிமை கோராத நிலையிலும் மேற்படி பணம் ரூ.230/-ஐ மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின் அரசுக்கு ஆதாயமாக்க உத்தரவிடப்படுகிறது. மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜுன் மாதம் 10-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.06.10 13:32:26 +0530

நீதித்துறை நடுவர் எண்.3,
ஈரோடு.

**இணைப்பு :**

**அரசு தரப்பு சாட்சிகள் :-**

| அரசு தரப்பு சாட்சி எண். | பெயர் | எவ்வகையான சாட்சி |
|---|---|---|
| அ.சா.1 | திரு. சூர்யா | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.2 | திரு. சேகர் | கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| அ.சா.3 | திரு. தினேஷ்குமார், உதவி ஆய்வாளர் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்.**

| அரசு தரப்பு சான்றாவணம் எண். | எவ்வகை ஆவணம் | யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | 07.06.2025-ம் தேதியிட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 சாட்சி கையொப்பம் | அ.சா.2 |
| அ.த.சா.ஆ.2 | 07.06.2025-ம் தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.1 சாட்சி கையொப்பம் | அ.சா.2 |
| அ.த.சா.ஆ.3 | எண்கள் மற்றும் எழுத்துக்கள் எழுதப்பட்ட வெள்ளை துண்டுபேப்பர்கள் மூன்று | அ.சா.2 |

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.4 | 07.06.2025-ம் தேதியிட்ட பார்வை மகஜர் | அ.சா.3 |
| அ.த.சா.ஆ.5 | 07.06.2025-ம் தேதியிட்ட மாதிரி வரைபடம் | அ.சா.3 |
| அ.த.சா.ஆ.6 | 07.06.2025-ம் தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.3 |
| அ.த.சா.ஆ.7 | 07.06.2025-ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| அ.த.சா.ஆ.8 | 07.06.2025-ம் தேதியிட்ட படிவம் 91 | அ.சா.3 |

**அரசு தரப்பு சான்று பொருள்:-**

| அரசு தரப்பு சான்று பொருள் எண். | எவ்வகை சான்று பொருள் | யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|
| அ.த.சா.பொ.1 | பணம் ரூ.230 | அ.சா.2 |

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :-** இல்லை

**குறிப்பு:-**

1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்துள்ளார்.

2) வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்தப்படவில்லை.

3) வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.06.10 13:32:31 +0530

நீதித்துறை நடுவர் எண்.3,
ஈரோடு.